# ஜாமக்காரன்
# JAMAKKARAN

VOLUME - 2 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 10
OCTOBER 2018 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,**

பரிசுத்த தெய்வத்தின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

உலகத்தில் உள்ள எந்த மதத்திலும், அந்தந்த மதங்களின் தெய்வங்கள் எனப்படுபவை எதற்கும் **பரிசுத்தம்** கிடையாது.

நம் கிறிஸ்தவ வேதம் மட்டும் நாம் ஆராதிக்கும் தெய்வம், திட்டவட்டமாக கூறுவதாவது, **நான் பரிசுத்தராக இருப்பதுபோல நீங்களும் பரிசுத்தமாக இருக்கவேண்டும்** எனபதாகும்.

நம் வேதத்தில் உலகமுடிவில் கிறிஸ்துவைப்போல **கிறிஸ்துவின் பெயரை வைத்துக்** கொண்டு **அந்திகிறிஸ்து,** (மலையாள பாஷையில் **எதிரி கிறிஸ்து** என்று அழைக்கப்படுபவன்) கிறிஸ்துவுக்கு எதிரான செயல்களை செய்து மக்களை பரிசுத்தத்திலிருந்து நீக்கவும், குடும்பத்தை உடைக்கவும், பிரிக்கவும் முயலுகிறான்.

உலக ஆரம்பத்தில் காலத்திலேயே **ஆதாம்,ஏவாள்** காலத்திலேயே தெய்வத்தோடு இணைந்த அந்த வாழ்க்கையை **வஞ்சகமாக** கர்த்தர் இட்ட கட்டளையை, வார்த்தையை சாத்தான் **அப்படியே தலைகீழாக மாற்றி** அவர்களை தன் வார்த்தைக்கு கீழ்படியவைத்து அவர்களை கர்த்தரிடமிருந்து பிரித்துவிட்டான். அதனால் அவர்கள் தேவகோபத்துள்ளாகி தேவ பிரசன்னத்திலிருந்து தள்ளப்பட்டார்கள்.

அதன்பிறகு அவர்கள் மூலமாக மக்கள் பூமியிலே பலுகி பெருகினார்கள், பெருகிய அவர்கள் மீண்டும் பாவம் செய்தனர். தேவ கோபமூண்டது. அதற்கு கர்த்தர் **முழு உலகத்தையும் தண்ணீரினால் அழித்தார்.** கர்த்தரை சேவித்த குடும்பம்மட்டும் அனைத்து ஜீவராசிகளுடன் **பேழை மூலம்** காப்பாற்ற கர்த்தர் சித்தம்கொண்டு அவர்கள் காப்பாற்றப்பட்டார்கள்.

ஜல பிரளயத்தில் பேழை மூலம் காப்பாற்றப்பட்ட அவர்கள் பலுகிபெருகினார்கள். பலுகிபெருகினவர்கள் மீண்டும் பாவம் செய்ய தொடங்கினார்கள். பாவம் மிகவும் உச்சத்துக்கு சென்றது. அனைவரும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் வழி விலகிப்போனார்கள். அதில் ஒரு குறிப்பிட்ட நாட்டில் மட்டும் பாவம் மிக அதிகமாகவும் யாரும் கேட்டிராத பாவமும் அருவருக்கத்தக்க பாவங்களும் பெருகி அந்த நாட்டில் அனைவரிலும் வித்தியாசமான **பாவம் பெருகி** உலகமனைத்திலும் அந்த பாவம் வைரல் மாதிரி பரவிவிடும் என்பதால் **அந்த நாட்டை மட்டும்** முழுவதும் அழிக்க கடவுள் ஏற்பாடு செய்தார். அதிலும் கடவுளுக்கு பயந்த குடும்பத்தைமட்டும் அந்த நாட்டைவிட்டு வெளியேற்றி அந்த குறிப்பிட்ட நாடு முழுவதையும் அக்கினியினால் அழித்தார். **முதல் தேவ கோபத்தில்** ஜலத்தால் **உலகத்தை** அழித்தார். **இரண்டாம் முறை** ஏற்பட்ட **தேவ கோபத்தில்** பாவம் உற்பத்தியான அந்த குறிப்பிட்ட நாடுகளையும் முழுவதுமாக அழித்தார். அந்த நாட்டின் பெயர்தான் **சோதோம் - கொமோரா** என்பதாகும்.

இப்போது நான் வாசகர்களுக்கு குறிப்பிட நினைத்தது **தெய்வம் அழித்த** அந்த குறிப்பிட்ட நாட்டில் உண்டான **அதே பாவங்களை** இப்போது நம் **பாரத தேசத்துக்குள்** யார் வேண்டுமானாலும் செய்யலாம் **அது தண்டனைக்குறியது அல்ல** என்று இந்திய **உச்ச நீதிமன்றம்** தீர்ப்பை கூறி, இதுநாள் வரை இருந்த சட்டத்தை நீக்கிவிட்டனர். ஆணோடு ஆண், பெண்னோடு பெண் என்ற இயற்கைக்கு விரோதமான பாவம் அதை செய்பவர்கள் **தண்டிக்கப்படவேண்டும்** என்ற 377ம் சட்டத்தை உச்சநீதிமன்றம் நீக்கிவிட்டது.

**இரண்டாவது பாவத்தையும்** இந்திய உச்சநீதிமன்றம் அது பாவம் அல்ல. இது **தனி மனித சுதந்திரம்** என்று கூறி அந்த தடை சட்டத்தையும் தூக்கி எறிந்து நீக்கியது.

உச்சநீதிமன்றம் நீக்கிய **தடை சட்டம்** இரண்டையுமே நம் **கிறிஸ்தவ வேதம் பாவம்** என்றும் **அதை கடவுள் அருவருக்கிறார்** என்றும், அந்த பாவத்தை செய்பவர்கள் மரித்தபின் பரலோகம் (சொர்க்கம்) செல்லமுடியாது என்றும் திட்டவட்டமாக கூறி எச்சரிக்கிறது. குறிப்பிட்ட அந்த இரண்டு பாவங்களும் நம் வேதத்தில் தெய்வத்தால் அழிக்கப்பட்ட **சோதாம்- கொமோரா** நாட்டில் உற்பத்தியான பாவங்களாகும்.

தாவீது கூறுகிறார். கர்த்தாவே **நீர் வெறுப்பதை நானும் வெறுப்பேன் - நீர் நேசிப்பதை நானும் நேசிப்பேன்** என்கிறார்.

நம் தெய்வம் வெறுக்கும் அதே பாவங்களை இன்று இந்திய **உச்சநீதிமன்றம்** இந்தியாவில் அனுமதித்து உள்ளது அது வக்கிரமாகும்.

**முதலாவது** (A) **ஆணோடு - ஆண் புணருவது** அல்லது **ஆணோடு-ஆண் திருமணம்** செய்துகொள்வது (Homosex) (Lesbien Sex).

(B) **பெண்னோடு - பெண் புணருவது** அல்லது **ஒரு பெண் மற்றொரு பெண்னை திருமணம்** செய்து வாழ்வது(Lesbian).

(C) **ஆணும் அல்ல - பெண்ணும் அல்லாத** நிலையில்உள்ள **திருநங்கை(அரவாணிகள்)** இதை **மூன்றாவது இனம்** (Third Gender) என்கின்றனர். முன்பு நான் குறிப்பிட்ட (A) - (B) இரண்டுவித இயற்க்கைக்கு மாறான பாவ நபர்களான் A,B இரண்டு கூட்டத்தினரும் **அரவாணிகளை** தங்களோடு ஏற்றுக்கொள்வதில்லை.

வேதத்தில் கூறும் **சோதோம் -கொமாராவும்** அதை சுற்றியுள்ள இரண்டு நகரங்களிலும் காணப்பட்ட **பாவங்கள்** மனிதர்களை உருவாக்கிய கர்த்தருக்கு பெரும் வெறுப்பையும் மகா கோபத்தையும் உண்டாக்கின.

1) **பெண்கள்: கடவுளின்** இயற்கை நீயதிபடி **மனித இயல்பான** முறையில் பெண்கள் தங்கள் வாழ்கையை அமைத்து கடவுளால் கொடுக்கப்பட்ட **பாலுறவை** (Sex) அனுபவித்து வாழாமல் **ஒரு பெண்** மற்றொரு **பெண்ணை** கணவனாக தெரிந்தெடுத்தது கற்பனை செய்ய முடியாத ஒருவகை பாவ இன்பத்தை அனுபவிப்பது. இதை கிறிஸ்தவ வேதம் **வெட்கக்கேடான இச்சை** என்று வர்ணிக்கிறது. (ரோமர் 1:26)

2) **ஆண்கள் :** மேலே வாசித்ததை போலவே ஆண்களும் தெய்வம் அமைத்த திட்டப்படி இயற்கை அனுமதித்த முறைப்படி, உலக சட்டப்படி பாவ உணர்வு இன்பத்தை அனுபவிக்காமல் **பிசாசின்** கிரியைகளான ஒரு **ஆண்** மற்றொரு ஆணை **மனைவியைபோல** அனுபவிக்க வெறிக்கொண்டு **காம தீயால்** பற்றி எரிந்தனர். ஆண்கள்- ஆண்களோடு **இழிவான** செயல்களைச் செய்தால் அவர்கள் தங்கள் ஒழுக்க கேட்டுக்கு ஏற்ற கூலியைத் தங்களிலேயே அதாவது தங்கள் **சரீரத்திலேயே** - தங்கள் வாழ்கையிலேயே பெறுபவர் ஆயினர். (கத்தோலிக்க வேத மொழிபெயர்ப்பு) ரோமர் 1:27. என்று கிறிஸ்தவ வெதம் எச்சரிக்கிறது.

கடவுள் ஆதியிலே உலகத்அரம்பத்தில் மனிதனை சிருஷ்டித்தபோது **ஆணும்-பெண்ணுமாகத்தான்** சிருஷ்டித்தார். **ஆணும் - ஆணுமாகவோ** அல்லது **பெண்ணும் - பெண்ணுமாகவோ** சிருஷ்டிக்கவில்லை.

☐ இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால், **இந்துமத தெய்வங்களின்** கோவில்களில் உள்ள **தேர்களை** சுற்றிப்பாருங்கள். இந்த கன்றாவி இயற்கைக்கு விரோதமான **உடல்உறவு** காட்சிகளை தத்ரூபமாக செதுக்கி வைத்துள்ளார்கள். இதன் பிரதிபலிப்புதான் இப்படிப்பட்ட தகாத உறவுகளை சட்டமாக்கி வைத்திருப்பார்களோ?.

3. அப்படியே **அரவாணிகளும்** கடவுளால் சிருஷ்டிக்கப்படவில்லை. இதைக்குறித்து இரண்டு வருடத்துக்குமுன் ஜாமக்காரனில் விஞ்ஞான பூர்வமாகவும், உடல்கூறு ஆதாரமாக்கியும் தெளிவாக எழுதினேன். அதுவே நான் எழுதியதை வாசித்த இந்திய **அரவாணிகள்** சங்கம் எனக்கு எதிராக **அரவாணிகளின் சங்கங்களை** எனக்கு எதிராக போராட ஏற்பாடு செய்தது. அவர்கள் கிளர்ந்து எழுந்து என் வீட்டை (கேரோ) முற்றுகை செய்யவும் என்னை **கைது செய்யவும்.** மத்திய அரசாங்கத்திலிருந்து **தமிழ்நாட்டு போலீசுக்கு** கட்டளை வந்ததாக அறிந்தேன். போலீஸ் உயர் அதிகாரிகள் என்னை அழைத்து விசாரித்தார்கள். நான் எங்கள் **வேத வசன** அடிப்படையில் எங்கள் **கிறிஸ்தவ சபைக்கான** ஆலோசனையை குறித்துதான் என் **ஜாமக்காரனில்** எழுதினேன். மற்றபடி **அரவாணிகளுக்கு** எதிராக அல்ல. எங்கள் தெய்வம் அரவாணிகளையும் நேசிக்கிறார். அவர்கள் **மனம்திரும்பினால்** அவர்களுக்கும் **பரலோகம்** (சொர்கம்) நிச்சயமாக கிடைக்கும் என்று நான் ஜாமக்காரனில் எழுதியதை போலீஸ் கமிஷனரிடம் காண்பித்து **ஜாமகாரன்** பத்திரிக்கை பிரதியை **தமிழ்நாட்டு** அரசுக்கும், **டெல்லி மத்திய அரசுக்கும்,** சேலம் தலைமை **காவல்துறை அதிகாரிக்கும்** கொடுத்துவிட்டேன். அவர்கள் அரவாணிகள் போராட்டத்தால் எனக்கு ஆபத்து நேரிடலாம். ஆகவே போலீஸ் பாதுகாப்பு கொடுக்கிறோம் என்றனர். அதற்கு ஊழியகாரனாகிய எனக்கு எந்த போலீஸ் பாதுகாப்பும் வேண்டாம் என்று எழுதி கொடுத்துவிட்டேன்.

# அரவாணிகள் வேறு - அண்ணகர்கள் வேறு

நம் கிறிஸ்தவ வேதத்தில் இயேசுகிறிஸ்து கூறும் மூன்றுவித **அன்னகர்கள்** யார்? என்பதையும் ஏற்கனவே ஜாமக்காரனில் விளக்கமாக எழுதினேன். இந்தியாவில் வெளிநாடுகளிலும் நான் எழுதியதை பல பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டார்கள்.

வேதம் திட்டமாக **பாவம்** என்று கூறும் இப்படிப்பட்ட தவறான **உறவுகளை** வேதாகம கல்லூரி படித்த **ஆயர்களாகவும், பிஷப்பாகவும், மாடரேட்டராகவும்** பணி செய்யும் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் கிறிஸ்தவ சபை ஊழியர்களும் இப்படிப்பட்ட தவறான செயல்களுக்கு துணைபோவது மிக கேவலமான, **வெட்கம்கெட்ட** செயலாகும்.

இதன் அடிப்படையில்தான் CSI சினாட் **இறை குடும்பம்** என்ற பெயரில் இந்த பாவங்களை CSI சபைக்குள் கொண்டுவர கடந்த மாதங்களில் தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தினார்கள். ஆனால் ஜாமக்காரன் இது பாவம் என்ற எழுதிய விளக்கத்தை CSI மக்கள் வாசித்ததும் சினாட் அறிவிப்பை வீசி எரிந்தனர்.

## கிறிஸ்தவ வேதத்துக்கு எதிரான பாவத்தை செய்ய தூண்டும் இந்திய உச்ச நீதிமன்றத்தின் அறிவிப்பு

நான் எழுதுவது உச்சநீதிமன்றம் எழுதிய **தீர்ப்பை** எழுதிய நீதிபதியை கண்டித்து எழுதுவதல்ல. நீதிமன்றம் அறிவித்த தீர்ப்பு **கிறிஸ்தவ வேத புத்தகத்தின்** அறிவுரைக்கு எப்படி எதிரானது என்பதை என் வாசகர்களுக்கு அறிவிக்கிறேன். அது இந்தியனாகிய நான் பெற்ற எழுத்து உரிமை ஆகும். அந்த சுதந்திரத்தின் அடிப்படையில் இந்தியாவிலுள்ள அனைத்து மதத்தினருக்காகவும் இது எழுதப்பட்டதல்ல. இது **கிறிஸ்தவர்களுக்காக** குறிப்பாக என் **ஜாமக்காரன் வாசகர்களுக்காக மட்டுமே** எழுதப்படுதாகும். இது வெறும் ஒப்பீடு ஆகும்.



கள்ள உறவு குற்றமில்லை
உச்ச நீதிமன்ற தீர்ப்பு

**கிறிஸ்தவ வேத சட்டம் - இந்தியா உச்ச நீதிமன்றம்** அறிவித்த தீர்ப்பு இவை இரண்டையும் ஒப்பீடு செய்து வாசகர்களின் சிந்தனைக்காக எழுதுகிறேன்.

நான் நீதிமன்றத்தையும், **நீதிபதிகளையும், இந்திய அமைப்பு சட்டதிட்டங்களையும் மதிக்கிறவன்.** நீதிமன்றங்களுக்காகவும், **நீதிபதிகளின் ஞானத்துக்காகவும்,** குறிப்பாக பாதுகாப்புக்காகவும் ஜெபிக்கிறவன்.

❖ 2018 செப்டம்பர் 27ம் தேதி **மற்றொரு பயங்கர தீர்ப்பு ஒன்றை உச்சநீதிமன்றம்** அறிவித்தது.

❖ திருமணமான ஒரு குடும்பத்தில் **ஒருவரின் மனைவியை** வேறு ஒரு நபர் கூட்டிக்கொண்டு ஓடிவிட்டால் **அது தண்டனைக்குறிய குற்றமல்ல.** ஒருவரின் **மனைவியை** இரகசியமாக கணவன் அல்லாத **வேறு ஒரு நபர்** கற்பழித்தாலும் அது குற்றமல்ல. ஒருவர் இரகசியமாக மனைவிக்கு தெரியாமல் பல பெண்களோடு தொடர்பு வைத்திருந்தாலோ, குடும்பம் நடத்தினாலோ அதுவும் **குற்றம் அல்ல.** இது சம்பந்தமான குற்றபிரிவு இனி செல்லாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு இவர்கள் வைத்த பெயர் **தனி மனித சுதந்திரம்** என்பதாகும்.

❖ இது இந்திய தேசத்தின் **ஒருவனுக்கு-ஒருவள், ஒருவளுக்கு-ஒருவன்** என்ற அற்புதமான கலாச்சாரத்தை சீரழித்து இந்தியாவை விபச்சார விடுதியாக மாற்றக்கூடிய பெரும் அபாயம் இதில் உண்டே!. இது பெரும் **கலச்சார சீரழிவுக்கு** நாட்டை அழைத்து செல்லும்.

❖ சுப்ரீம் கோர்ட் எழுதிய குறிப்பிட்ட அந்த இரண்டு விஷயங்களை குறித்த தீர்ப்புகள் யாவும் கிறிஸ்தவ வேத உபதேசத்துக்கு எதிராகும்.

❖ நம் கிறிஸ்தவ வேதம் குறிப்பாக நாம் வணங்கும் **பரிசுத்த தெய்வமான** இயேசுகிறிஸ்து கூறிய **பரிசுத்த உபதேசத்துக்கு** கோர்ட் தீர்ப்பு விரோதமானதாகும்.

**மனைவி உயிரோடு இருக்க கணவன் வேறு ஒரு பெண்ணை விவாகம் செய்தால் அது விபசாரத்துக்கு சமம் என்றல்லவா இயேசுகிறிஸ்து** கூறினார். 1கொரி 7:10, 7:5, 7:27.

ஆனால், இந்தியாவை ஆளும் காவி கட்சி **RSS, பஜ்ரங்தள்** இப்படிப்பட்ட கட்சிகள் இந்த தீர்ப்பைக்குறித்து ஒரு எதிர்ப்பையும் கூறவில்லை. பிரதமர் **திரு.மோடி** அவர்களும் வழக்கமானபடி வாய் திறக்கவில்லையே!.

மேலே குறிப்பிட்ட இவர்களுக்கு இதைக்குறித்து கவலையில்லை. காரணம் இவர்கள எல்லாரும் வணங்கும் தெய்வங்கள் எப்படியோ அப்படியே **இவர்களும் வாழ்கிறார்கள்.**

இவர்களின் ஒவ்வொரு தெய்வத்துக்கும் **பல மனைவிகள்** உண்டு. இவர்கள் ஆட்சியிலேயே அயோத்தியில் கட்ட துடிக்கும் **ராமர் கோவிலின்** கட்ட தீவிரிக்கும் இவர்களின் தெய்வமான **ராமரின் மனைவி சீதையையும்** அவர் கற்பையும் சிலர் சந்தேகப்பட்டதனால்தானே 40 வருடம் வனவாசம் செய்து தான் கரைபடவில்லை என்பதை நிரூபிக்க தீ குளித்ததாக புராணங்கள் கூறுகிறது. இப்படியிருக்க ஒருவன் எத்தனை பெண்ணுடனும் சட்டபடியோ, சட்டத்தை மீறியோ சேர்ந்து வாழலாம் என்ற இவர்கள் எப்படி செய்ய முடியும் அதை குற்றம் என்று கூற முடியாது என்று கூறினால் நீதி மன்ற தீர்ப்பு அநியாயம் இல்லையா?.

ஆனால், அதே சமயம் இவர்களின் மற்ற தெய்வங்களான கிருஷ்ணன், முருகன் போன்ற பல தெய்வங்களுக்கு பல மனைவிகள் உண்டு. அதனால்தான் தீர்ப்பை இவர்கள் எதிர்க்கவில்லை.

இவர்கள் மனைவியுடனோ, இவர்கள் புருஷனோடோ எத்தனை பெண்களும் அல்லது கணவன்களோடு, எத்தனை மனைவிகளுடனும் குடும்பம் நடத்தலாம். இப்படிப்பட்ட தவறு செய்பவர்களுக்கு இந்த தீர்ப்பு மிகவும் சவுகரியமாகிப்போனது.

வெளிநாடுகளில் திருமணமாகாமல் **ஒரு ஆணோ, பெண்ணோ ஒரு வீட்டில் கணவன் - மனைவிகளாக** வாழலாம். அங்குள்ள கிறிஸ்தவ சபைகளும் அதை ஏற்றுக்கொள்கிறது என்பது சபைகளின் பரிசுத்த குலைச்சலை காட்டுகிறது.

# இது ஆபத்தான செய்தி ----- அவசர செய்தி:

நாம் கண்ணீர்விட்டு ஜெபிக்க தொடங்குவோம். சட்டம் இல்லாமலே நம் கிறிஸ்தவ சபைகளில் பல குடும்பங்களில் **இரண்டு** மனைவிகளும், **மூன்று** மனைவிகளும் சண்டை போடாமல் ஒற்றுமையாக **திருவிருந்துக்கு** முட்டிப்போடுகிறார்கள். இப்போது இந்திய சட்டமே பல தாரத்தை இந்திய மக்களுக்காக வசதி செய்து கொடுக்கும் நாற்மெடுத்த அரசாங்கமும், அதன் சட்டமும் தேவகோபத்துக்கு வழி உண்டாக்குகிறது.

# உச்ச நீதிமன்ற தீர்ப்பு VS உலக இரட்சகரின் தீர்ப்பு

(ரோமர் 1:18 முதல்)

**புற மதஸ்த்தார்மேல் கடவுளின் கோபம்**

மனிதர்களின் ஒழுக்கக்கேட்டின் மீதெல்லாம் கடவுளின் சினம் விண்ணினின்று வெளிப்படுகிறது. ஏனெனில் இவர்கள் தங்கள் ஒழுக்கக்கேட்டினால் உண்மையை ஒடுக்கிவிடுகின்றனர். கடவுளைப்பற்றி அறியக்கூடியதெல்லாம் அவர்களுக்கு தெளிவாய் விளங்கிற்று.

அவர்கள் சாக்கு சொல்வதற்கு வழியில்லை. ஏனெனில் அவர்கள் கடவுளை அறிந்திருந்தும் கடவுளுக்கு உரிய மகிமையை அவருக்கு அளிக்கவுமில்லை. தங்கள் வீணான சிந்தனைகளில் அறிவிழந்தனர். அவர்களுடைய உணர்வில்லா உள்ளம் இருண்டு போயிற்று என்று சொல்லிக்கொண்டாலும் பையித்தியக் காராகி மடையர் ஆயினர்.

அழிவில்லாக் கடவுளின் மாட்சிமையை விடுத்து . அதற்கு பதிலாக பறவைகள் விலங்குகள், ஊர்வன நிரூபங்களுக்கு ஒப்பாக அதன் சாயலான உருவங்களை தெய்வங்களாக ஏற்று வழிபட்டனர். ஆகவே அவர்களுடைய உள்ளத்து இச்சைகளின்படி அவர்கள் ஒருவரோடொரவர் தங்கள் உடல்களை இழிவுபமுத்த கடவுள் விட்டுவிட்டார். ஏனெனில் அவர்கள் கடவுளின் உண்மையைப் பொய்யாக மாற்றினர். படைப்பு பொருட்களுக்கு வழிபடும் ஊழியமும் செய்தனர். படைத்த தெய்வத்தை மறந்தனர்.

ஆதலால் கடவுள் அவர்களை வெட்கக்கேடான இச்சை வியாதிகளுக்குக் ஒப்புக்கொடுத்துவிட்டார்.

பெண்கள் இயல்பான (இயற்கையான) முறையைவிட்டு இயல்புக்கு மாறாக நடந்துகொண்டனர்.

அவ்வறே **ஆண்களும் - பெண்களோடு** சேரும் இயல்பான முறையை விட்டு ஒருவர் மீது ஒருவர் விரக தாபத்தாலும் காமத்தீயாலும் பற்றி எரிந்தனர்.

ஆண்கள் ஆண்களுடன் இழிவான செயல்களைச் செய்து தங்கள் ஒழுக்கக்கேட்டுக்கு எற்று கூலியைத் தங்களிலேயே பெறுபவர் ஆயினர்.

கடவுள் அறிந்து ஏற்பதன் பகைமையை அவர்கள் மறுத்ததால் பெற்றோருக்கு அடங்காதவர்கள். வாக்கு தவறுபவர்களாக மாறினர். அவர்களுக்கு அறிவு இல்லை. இவர்கள் கடவுளுடைய நியமத்தை அறிந்திருந்தும் இவ்வாறு நடக்கின்றனர். தாங்கள் நடப்பது மட்டுமன்று அப்படி பிழையாக நடப்பவர்களுக்கு பாராட்டு அளிக்கின்றனர்.

ஆகையால் பிறருக்குத் தீர்ப்பிடும் மனிதா !

நீ யாராயினும் சரி, சாக்குச் சொல்லுவதற்கு வழியில்லை. ஏனெனில் பிறருக்குத் தீர்ப்பிடுவதால் நீ உனக்கு எதிராகவே தீர்ப்பு கூறுகிறாய். **தீர்ப்பு கூறும் நீயே** அவற்றை செய்கிறாயே? இத்தகைய செயல்களைச் செய்வோருக்கு கடவுள் இடும் தீர்ப்பு நீதிவலுவாதது என்று நமக்கு தெரியும். நீ மட்டும் கடவுளின் தீர்ப்புக்கு தப்பித்துக்கொள்ளலாம் என நினைக்கிறாயா? அல்லது கடவுளது அளவற்ற இரக்கத்தையும், சகிப்பையும்,பொறுமையையும் புறக்கணிக்கின்றாயா? கடவுள் இரக்கம் காட்டுவது உன்னை மனந்திரும்ப தூண்டுவதற்கே என்பதை அறியாயோ ?

*(மேலே வாசித்தது கத்தோலிக்க வேத புஸ்தகத்தின் மொழிபெயர்ப்பின் வியாக்கியானம்).*

**கர்த்தரின் ஊழியத்தில்:**
**- டாக்டர் புஷ்பராஜ்**

# ஆன்-லைன் பேங்கிங் (ONLINE BANKING)

காணிக்கையை மணிடிரான்ஸ்பர்(NET Transfer) வழியாக அனுப்ப விரும்புகிறவர்களுக்கு என்னுடைய வங்கி தகவல்கள்:

**A/c Name : Dr. M.G.E.PUSHPARAJ :**

வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப (**Overseas Doners):**

**1). Bank Name : State Bank of India - Srirangapalayam Branch - SALEM -1970**
**A/c No. 10764116842, Swift code: SBININBB637**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப **(India Doners):**
**IFSC CODE : SBIN0001970- A/c No.10764116842**

2) **Bank Name: CANARA BANK, (Suramangalam Branch) - 1219**

வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப(**Overseas Doners):**
**SWIFT CODE: CNRBINBBSLM - A/c No. 1219101013622**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப**India Doners:**
**IFSC CODE : CNRB0001219 - A/c No. 1219101013622,**
**MICR CODE: 636015005.**

# **சகோ. மோகன் C.லாசரஸ்** (நாலுமாவடி) அவர்களை கைது செய்ய தீவிரிக்கும் இந்து தீவிரவாதிகள்.


**சகோ. மோகன் C. லாசரஸ்**

சகோ. மோகன் C. லாசரஸ் அவர்கள் இந்து ஆலயங்களை ஊழியர்கள் மத்தியில் பிரசங்கிக்கும்போது என்றைக்கோ **சாத்தானிகளின் அரண்** என்ற வாரத்தையை உபயோகித்துள்ளார். அதில் தவறேதும் இல்லை. அவர் அதை தெருவில் அல்லது இயேசு விடுவிக்கிறார் பொது கூட்டங்களில் கூட பேசினதில்லை. பொதுஇடத்தில் மற்ற மதத்தினரின் தேவர்களை, ஆலயங்களை குறித்து பேசியிருந்தால் ஒருவேளை மற்ற மதத்தினரின் மனது புண்பட்டது என்று கூறலாம். ஆனால் இதை அவர் ஊழியர்கள் மத்தியில் ஒரு சிறு கூட்டத்தில் பேசியிருக்கிறார். அதையும் தவறு என்று கூறமுடியாது. நம் வீட்டுக்குள் நாம் எதை வேண்டுமானாலும் பேசலாம். அதை தவறு என்று கூற முடியாது. அப்படித்தான் சிறு கூட்டத்தில் அவர் பேசினார்.

☐ கர்த்தர் உலகத்தை படைத்த நாளிலிருந்தே **விக்கிரகத்தை** வெறுக்கிறவர். விக்கிரகத்தை ஆராதிக்கிறவர்களையும் வெறுக்கிறார்.

உயிருள்ள உண்மையான தெய்வத்தை அதுவும் **வானத்தையும், பூமியையும்** உண்டாக்கினவரை ஆராதிக்கும் மக்களை கடவுளிடமிருந்து பிரிக்க பிசாசு **விக்கிரக தெய்வங்களை** உருவாக்கி அதன் மூலம் அற்புதங்களையும் செய்து கடவுளுடைய மக்களை பிரிக்க ஆதிமுதலே பிசாசு முயற்சி செய்கிறான்.

உலகம் படைக்கும் முன் ஆரம்பத்தில் தனக்கு சேவை செய்ய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட 3 தூதர்களில் ஒருவன்தான் **லூசிபர்** என்ற தூதன். அவனுக்கு அற்புதங்களை உண்டாக்கும் சக்தியை கர்த்தர் கொடுத்திருந்தார். அதனால் அவன் பெருமை கொண்டு **கடவுளுக்கு சமமாக தன்னை உயர்த்த முற்பட்டான்.** உடனே கடவுள் அவனையும் அவன் கூட்டத்தையும் பரலோகத்திலிருந்து பூமிக்கு தள்ளிவிட்டார். **அந்த தள்ளப்பட்ட தூதன்தான் பிசாசு** என்று அழைக்கப்படுகிறான். ஆகவே விக்கிரக வணக்கம் எதுவானாலும் **அது பிசாசு வணக்கம்** ஆகும். கடவுள் தன்னைப்போல் உருவத்தையாகிலும் சொரூபத்தையாகிலும் வணங்கவும் வேண்டாம் சேவிக்கவும் வேண்டாம் என்று ஆதியிலேயே கர்த்தர் 10 கட்டளைகளில் ஒன்றாக எழுதி அறிவித்தார்.

அதனால்தான் உண்மையான கிறிஸ்தவர்கள் இயேசு **கிறிஸ்துவின் புகைப்படத்தையோ** இயேசு அறையப்பட்ட **சிலுவை** அடையாளத்தையோ ஆலயத்தில் வைக்கப்படும் மர **சிலுவையானாலும் தங்க சிலுவையானாலும்** அதை வணங்கினால் அது **விக்கிர வணக்கமாக** கருதி தேவன் அதை வெறுக்கிறார். அப்படி வணங்குகிறவர்களையும் வெறுக்கிறார்.

அதனால்தான் **மரியாளையோ,**இயேசுவின் சீஷர்களாகிய **அந்தோணியாரையோ,** பேதுருவையோ உருவமாக அமைத்து அல்லது வார்த்து அவற்றை **வணங்ககூடாது** என்று கிறிஸ்தவ வேதம் நமக்கு போதிக்கிறது. இதை எதிர்த்துதான் **மார்டின் லூத்தர்** போராடி **புரோட்டஸ்டன்ட்** சபையை ஸ்தாபித்தார்.

இதைதான் **நாங்களும்** மோகன் C. லாசரஸ்ஸும் உபதேசிக்கிறோம். **எங்கள் வேதத்தை** உபதேசிக்க **எங்கள் தெய்வத்தின்** உபதேசத்தை மக்களுக்கு போதிக்க எங்கள் கடவுள் எங்களுக்கு **கட்டளையிட்டிருக்கிறாரே.**

அது வெரும் விக்கிரகம் அது காது இருந்தும் கேட்காது. வாய் இருந்தும் பேசாது. அப்படிப்பட்ட தேவர்களின் விக்கிரகத்தை மனிதன் **தன் கையில்** தன் இஷ்டப்படி உண்டாக்குகிறான். **கடவுள்தான் நம்மை** உண்டாக்க வேண்டும். ஆனால் இங்கு மனிதன் கடவுளை உண்டாக்குகிறான். அவனே அந்த கடவுளை கடலிலோ, குளத்திலோ காலில் மிதித்து அழிக்கிறான். இந்த செயல்களை அறிந்தவர்கள் யோசிக்க வேண்டாம்? மனிதன் தன் மனதுக்கு தோன்றியபடி ஒரு கடவுளை வரைகிறான். அதற்கு பிரேம்போட்டு பூஜை அறையில் வைத்து மாலை போட்டு சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்குகிறான். மனித புத்திக்கு அது முட்டாள்தனம் என்று படித்தவர்களும், படிக்காதவர்களுக்கும் விளங்காது ஆச்சரியமே. ஆகவேதான் **உயிருள்ள, பேசும், கேட்கும்** தெய்வத்தை நாங்கள் அறிவிக்கிறோம். நாங்கள் அறிந்த நல்லது ஒன்றை மற்றவர்களுக்கு அறிவிக்காதிருப்பது எப்படி ?

அதைத்தான் மோகன் C. லாசரஸும் உபதேசித்தார். இந்த சுதந்திர இந்தியாவில் **பேச்சு சுதந்திர சட்டம்** இன்னும் நீக்கப்படவில்லை.

நாங்கள் **உபதேசிக்கிறோம்.** யாருக்கும் எங்கள் **கருத்துக்களை** திணிப்பதில்லை. ஒருவன் ஒரு இந்து பெண்ணை திருமணம் செய்தால் **அவளிடம் இயேசுவைதான்** வணங்க வேண்டும் என்று கணவன் **கட்டாயப்படுத்துவதில்லை.** அவர்களாக அறிந்து உணர்ந்து இயேசுவை ஏற்றுக்கொண்டால்தான் நல்லது. இதைத்தான் எங்கள் தெய்வம், **எங்கள் வேதம்** போதிக்கிறது.

**பாரத நாட்டில்** பிறந்து பாரதநாட்டில் வளர்ந்து வாழும் **எங்களுக்கு** எந்த தெய்வத்தை **வணங்கவேண்டும்,** என்ன சாப்பிட வேண்டும் என்ற உரிமை எங்களுக்கு இல்லையா?.

**இந்திய சுப்ரீம் கோர்ட்டும்,** இந்திய பார்லிமெண்டும் திருமணம்ஆன தம்பதியினர் விவாகரத்து செய்யாமலே மற்றொரு ஆணுடன் கள்ளதொடர்பு வைத்துகொள்வது குற்றமல்ல என்று அறிவித்துவிட்டது. அது **அவன் தனிப்பட்ட சுதந்திரம்** அது குற்றம் இல்லை என்று கூறுவது இந்தியர்களாகிய நமக்குதான் அவமானம். வெட்கி தலைக்குனிய வேண்டிய விஷயமாகும். நம்முடைய இந்திய **பண்பாட்டுக்கு** அவமானம் உண்டாக்கும் தீர்ப்பு வெளியிட்டப்பட்ட நிலையில் அதை தனிமனித சுதந்திரம் என்று அறிவிக்கும்போது அந்த தனிமனித சுதந்திரம் மோகன் C. லாசரசுக்கோ, இதை எழுதும் **எனக்கோ** கிடையாதா?.

காம விகாரம்கொண்டு உண்டாகும் **பால் உணர்வு** செயலான மாற்றான் மனைவியுடன் கள்ளதனமாக வாழ்வது மற்ற பெண்ணின் கணவனுடன் **கள்ளஉறவு** வைப்பது அது குற்றமில்லை! அது **தனிமனித சுதந்திரம்** என்று பாரத உச்சநீதி மன்றமும் இந்திய அரசாங்கமும்

கூறும்போது பரிசுத்த வாழ்வுக்கு அசுத்தம் எது? ஆபாசம் எது? **பேசும் தெய்வம்** யார், **பிசாசு** யார்? **உயிருள்ள தெய்வம் எது?** என்று கூற **எங்களுக்கு தனி மனித உரிமையில்லையா?** நல்லதை கூறும்போது **தவறாக வாழ்கிறவர்களுக்கு** கோபம் உண்டாகிறது. வெட்கம் உண்டாகிறது. **நல்லதையும்** கெட்டதையும் வேறுபடுத்தி காட்டி பேச எங்களுக்கு **தனி மனித உரிமை** இல்லையா?.

# தலையை வெட்டுங்கள்

பல மாதங்களுக்கு முன் யோகா நடத்தும் பதஞ்சலி இயற்கை வைத்திய கம்பெனி நடத்தும திரு. **ராம்தேவ்** அவர்கள் இந்தியாவில் **பாரத மாதாவுக்கு ஜெய்** என்று சொல்லாதவர் யாராக இருந்தாலும் அவர்களின் **தலையைவெட்டுங்கள்** என்று பகிரங்கமாக அறிக்கைவிட்டாரே அது நாட்டு கலவரத்தை தூண்டும் வார்த்தையில்லையா? சட்டம் - ஒழுங்கு பிரச்சனை வராதா ?



திரு. ராம்தேவ்

வட இந்திய இந்துமத தீவிரவாத தலைவன் **Dharma Jagan** என்ற இந்துமத அமைப்பின் தலைவன் **ராஜேஸ் சிங்** என்பவன் TVக்கு பகிரங்கமாக கொடுத்த அறிவிப்பில் வருகிற **2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் தேதிக்குள்** இந்தியாவில் **கிறிஸ்தவர்களோ,** இஸ்லாமியரோ இந்தியாவில் **ஒருவர்கூட இருக்கமாட்டார்கள்.** அத்தனைபேரும் முழுவதுமாக அழிக்கப்படுவார்கள். இது **பாரத மாதாவின்** கட்டளை. இந்தியா நாடு இந்து மதத்துக்கு மட்டும்தான் சொந்தம். ஆகவே இந்தியா **இந்துமத நாடாக** மாறவேண்டும் என்று **பாரத மாதா** தெய்வத்தின் மனசாட்சி ஏங்கிக்கொண்டிருக்கிறது.

ஆகவே **கிறிஸ்தவர்களும்,** இஸ்லாமியருக்கும் 2021ம் ஆண்டு **டிசம்பர்** மாதம் 31ம் தேதிதான் **இறுதி நாளாக** நாங்கள் **நியமித்துள்ளோம் என்று கூறினார்.** இது எத்தனை பயங்கரமான **மத கலவரம் உ**ண்டாக்கும் செய்தி. அதனால் சட்டம், ஒழுங்கு **இந்தியா முழுவதும்** பாதிக்கப்படும் அறிவிப்பல்லவா? இவர் கூறுகிறபடி நடந்தால் இந்தியா முழுவதும் நிறைந்திருக்கும் **இஸ்லாமியர்** சும்மா விடுவார்களா?. கிறிஸ்தவர்கள் ஜெபித்து அமைதியாகிவிடுவார்கள். ஆனால் இஸ்லாமியர்கள் அப்படியிருக்கமாட்டார்கள். இந்திய முழுவதும் **இரத்த ஆறு ஓடுமே. இந்திய அரசாங்கம்** இப்படிப்பட்ட **தீவிரவாத பேச்சுக்கு** எனன் நடவடிக்கை எடுத்தது?.

இந்த செய்தி INDIA TV, ND TV ஆகியவைகளில் வெளி வந்ததே! இந்திய மக்கள் பார்த்தார்களே ! இவைகளின் websiteல் போய் பாருங்கள், ஆதாரம் கிடைக்கும் அன்றைய Times of India, Hindu வடஇந்திய **இந்து சமாஜம்** பத்திரிக்கைகளில் அதே பகிரங்க எச்சரிப்பை செய்தியாக வெளிவந்ததே! இப்படி பயங்கர தீவிரவாத பேச்சை பேசியவற்கு மந்திரி மாலையிடுகிறார். ஆனால் தனி அறைக்குள் பேசிய **மோகன் சி. லாசரஸை** கைது செய்யப்பட வேண்டும். இது என்ன நியாயம்.?

# இசையமைப்பாளர் இளையராஜாவின் பொறாமை செய்தி:

இயேசு இப்போதும் உயிரோடு இருக்கிறார் என்று மோகன் C. லாசரஸ் பேசியதற்கு இளையராஜா தன் பதிலாக அவர் தன் பேட்டியில் **இயேசு உயிரோடு இருக்கிறார்** என்று கூறுவது பொய். இந்த உலகத்திலேயே நான் வணங்கும் திருவண்ணாமலை **ரமண மகரிஷி** ஒருவர் மட்டும்தான் இப்போதும் **உயிரோடு இருக்கிறார்** என்று அவர் அடக்கம் செய்யப்பட்ட **சமாதியில் நின்றுகொண்டு** சமாதியை வணங்கும் **இளையராஜா, செத்த** ஒரு **சாதாரண மனுஷனை** உயிருள்ளவர் என்று வர்ணித்து சவால் விடுகிறார்.

இளையராஜாவின் **இசை தொழில்** தொய்ந்துபோய் அவரை சினிமாவுக்கு அழைப்பார் யாரும் இல்லாத நிலையில் அந்த இடத்தை A.R. ரஹ்மான் போன்றவர்கள் ஆக்கிரமித்துகொண்ட விரக்தியில் இப்படி பேசுகிறார். தன் இசைக் குழுவில் வாலிப பையனாக வந்த A.R. ரஹ்மான் **கீ போர்ட்** வாசித்தார். அதே மாணவனிடமே சென்று A.R. ரஹ்மானின் இசை குழுவில் A.R. ரஹ்மான் கொடுத்த பணத்துக்கு **உதவி வேலை** செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டாரே ! அந்த **பெருத்த அவமானம்** மாதாமாதம் பௌர்ணமி அன்று திருவண்ணாமலைக்கு சென்று செத்துபோன **ரமண ரிஷி** மண்டப கல்லறை சென்று தரிசித்ததால் கிடைத்த **தோல்வி பரிசு** தான் அது.

அதன்பின்தான் ஒன்று இரண்டு சினிபட சான்ஸ் இப்போது கிடைத்தது. ஆனால் அத்தனை படமும் பாட்டும் **தோல்வியாகவே** முடிந்தது. அதை அறிந்த கோடம்பாக்கம் சினிமா இசை பக்கவாத்திய குழுவினர் இளையராஜாவிடம் பாட்டில் விளையாடிய லட்சுமிகடாட்சம் இப்போது **இந்து மதத்திலிருந்து** இஸ்லாமிய மதத்துக்கு மாறிய திரு. A.R. ரஹ்மானின் கையிலும் இன்னும் புதிதாக எழும்பிய இசையமைப்பாளரிடமும் சென்றுவிட்டது என்று பேச ஆரம்பித்துவிட்டனர். இப்போது தோல்வியை மாத்திரமே சுவைத்துக்கொண்டிருக்கிறார். **தன் பழைய வெற்றி பாடல்களை** வைத்து தனியாக மண்டபம் வாடகைக்கு எடுத்து இசை கச்சேரி நடத்தி கிடைத்த பணத்தை கை செலவுக்கு பெற்றுக்கொள்கிறார்.

**இளையராஜாவை** இசையமைப்பாளராக அறிமுகப்படுத்திய பிரபல டைரக்டர் **பாரதிராஜா** அவர்கள் இளையராஜா ஏன் இந்த தேவையில்லாத சர்ச்சைக்குரிய வேலையில் சிக்குகிறார். ஒரு காலத்தில் இதே இளையராஜா அகம்பாவம் தலைக்கு ஏறி யாரையும் மதிக்காத இவர் இன்று தேவையில்லாமல் மத பிரச்சனையில் தலையிட்டு அவமானப்படுகிறார். இவருக்கு இது தேவையா? என்று கூறியதாக செய்திகள் கூறிகிறது. வாட்அப்பிலும் வெளியிட்டிருக்கிறார்கள்.

# மோகன் C. லாசரஸ் அவர்களை இந்து முன்னணியினர் கைது செய்ய துடிப்பதேன்?

இந்துமத தெய்வங்களையும், மதத்தையும் இவர் தூஷித்தார் என்றும் அதனால் தமிழ்நாடெங்கும் மக்கள் கொந்தளித்துள்ளார்கள் என்று காண்பிக்க தமிழ்நாட்டில் சுமார் 19 வித்தியாசமான ஊர்களில் காவல் நிலையங்களில் வழக்கு தொடர இந்து முன்னனி ஆட்களை ஏற்பாடு செய்து மோகன் C. லாசரஸ் அவர்களுக்கு எதிராக **பொய் வழக்கு** பதிவு செய்ய முயன்றார்கள்.

ஒரு ஆளை போலீஸில் வழக்கு பதிவு செய்து **FIR போட்டுவிட்டால்** அவர் வெளிநாடு செல்லமுடியாது என்பது இந்து தீவிரவாதிகளுக்கு தெரியும். சகோதரனுக்கு தொடர்ந்து சில வெளிநாடுகளுக்கு ஊழியம் செய்ய திட்டம் உண்டு. மேலும் இந்தியாவில் பல்வேறு **மாநிலங்களில்** இவருக்கு ஊழியம் உண்டு என்பதையெல்லாம் அவர் பத்திரிக்கையில் அவர்கள் கண்டதால் அதை தடுக்கத்தான் இந்த **FIR வழக்குபதிவு** முயற்சிகளை செய்தார்கள்.

**வெளிநாடு** மட்டுமல்ல **இந்தியாவிலேயே** ஊழியம் செய்யாதபடி வழக்கு தொடுத்த 19 **ஊர்களுக்கும்** வாரம் தோறும் ஆஜர்ஆக அவரை **அலைய வைக்கத்தான்** இந்த ஏற்பாடு. அவர்களுக்கு தெரியும் **இந்த வழக்கு நீதிமன்றத்தில் தோற்றுபோகும்.** ஆனால் கொஞ்ஜ காலம் அவரை **இங்கும் அங்குமாக** இழுத்தடிக்கலாமே என்ற தீய எண்ணம் இப்படி செய்தது.

இப்படி மோகன் சி. லாசரஸ் மீது வழக்கு தொடுக்க ஆதாரத்தை கொடுத்தது யார் தெடுத்தது ? ஒரு இந்து மதத்தை சேர்ந்தவரல்ல. மோகன் C. லாசரஸ் பிரசங்கம் செய்த அந்த ஊழியர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரு கிறிஸ்தவ நபர்தான் அவர் பேசியதை தன் **மொபைலில் பதிவு செய்து** இந்து முன்னணியினருக்கு யூதாஸ்காரியூத் 30 வெள்ளி காசுகளுக்கு காட்டிகொடுத்ததைப்போல காசு வாங்காமல் ஒப்படைத்தான். ஒரு இந்து இப்படிப்பட்ட காரியத்தை செய்திருந்தாலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆனால் பிரசங்கம் கேட்கவந்த ஆட்களிலேயே ஒரு ஆள் இந்த பெரும் பாவத்தை செய்தது கிறிஸ்தவ ஊழியங்களுக்கு தலை குனிவை உண்டாக்குகிறது.

இது வெறும் **பொறாமையினால்** உண்டானதாகும். அக்டோபர் மாதம் முதல் வாரத்திலேயே மோகன் C. லாசரஸ் சார்பில் உயர் நீதிமன்றத்தில் **நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ்** அவர்கள் முன் FIR தாக்கல் செய்வதில் **விலக்கு அளிக்குமாறு** கோரப்பட்டு நீதிபதி அவர்களும் அவரின் உண்மை நிலையறிந்து FIR தாக்கல் செய்வதில் **விலக்கு அளித்து** விசாரணையை அக்டோபர் 9ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளார்.

**குறிப்பு :** இதை வாசிக்கும் பலர் ஜாமக்காரன் நாலுமாவடி **மோகன் C.லாசரசை** தாக்கி எழுதுபவராயிற்றே. இப்போது மோகன் C. லாசரசுக்கு ஆதரவாக எழுத எப்படி மாறினார்? என்று பேச ஆரம்பிப்பார்கள். இப்படியேதான் பொதுவாக எல்லாரும் என்னையும் என் ஜாமக்காரன் எழுத்தையும் விளங்கிகொள்ளாதவர்கள் இப்படித்தான் தவறாக புரிந்துக்கொள்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எனக்கு எதிராக பேசுவது மட்டுமல்ல, என்னை வெறுக்கவும் செய்தார்கள்.

**அன்னிய பாஷை** பேச ஆசைப்படாதீர்கள். அது **வரம்,** அது **அடையாளம்** அல்ல. அது **சபைக்கு கொடுக்கப்பட்டதல்ல** என்றேன். உடனே டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் **பரிசுத்த ஆவியையே இல்லை என்கிறார்.** ஆகவே அவர் **பரிசுத்த ஆவியானவருக்கு எதிரானவர் இப்படியாக கூறுகிறார்கள்.** மோகன் C. லாசரசும் கூறினார் டாக்டர் புஷ்பராஜ் அவர்களுக்கு **குற்றம் சுமத்தும் ஆவியிருக்கிறது** என்றார். அதன் அர்த்தம் **பிசாசின்** ஆவியிருக்கிறது என்றார். **பரிசுத்த ஆவியானவரை** இல்லை என்று நான் ஒரு நாளும் ஒரு கூட்டத்திலும் பேசினதும் இல்லை, ஜாமக்காரனில் எழுதியதும் இல்லை. அதைப்போலவே இப்போது நான் சகோ. மோகன் C. லாசரஸுக்கு **ஆதரவாக** நான் எழுதிய இந்த கட்டுரையை வாசித்து **ஆச்சரிய படவேண்டாம்.** இப்போது சகோதரனுக்கு ஏற்பட்ட இந்த **போலீஸ் வழக்கு** முழு கிறிஸ்தவத்துக்கும் **இந்து முன்னணியாரால்** ஜோடிக்கப்பட்ட எச்சரிப்பும் முன் அறிவிப்புமாகும். இதே மாதிரியான **எச்சரிப்பையும்** வக்கீல் நோட்டீசையும் நானும் சந்தித்தவன்தான். இந்த

வழக்கில் சகோ. **மோகன் C. லாசரஸ்** பேசிய பிரசங்கித்ததில் நூற்றுக்கு நூறு **உண்மை உண்டு.** அதுவும் குறிப்பாக அதை அவர் **பொது இடத்தில்** பேசவில்லை. **பிசாசு பிசாசுதான் - தெய்வம் தெய்வம்தான்.** கிறிஸ்தவ **வேதம்** எதை **சாத்தானின் செயல்** என்றும், **சாத்தானின் இருப்பிடம்** எனறும் கூறுகிறதோ அதைத்தான் அவர் கூறியிருக்கிறார். அதற்காக அவர்மேல் 19 பொய் வழக்கு தொடுத்த **இந்து முன்னணியினரின்** செயலை **அநியாயம்** என்கிறேன், பெரும் சதித் திட்டம் என்கிறேன்.

மற்றபடி **மோகன் C. லாசரஸ்ஸின்** ஊழியத்தில் அவர் கூட்டத்தில் **ஜெபத்தில் அழைக்கும் பெயர்கள்** யாவும் பிழையான உண்மையற்ற செயல்கள் ஆகும். அவர் பேசும் **அன்னியபாஷையும்** அவர் உபதேசிக்கும் **அன்னிய பாஷை** யாவும் வேதவசனத்துக்கு முறணானது ஆகும்.

☐ இந்த கட்டுரையை சகோதரனுக்கு ஆதரவாக எழுதியதால் மோகன் C. லாசரஸ்ஸைப்பற்றி மேலே குறிப்பிட்ட விவரங்கள் ஜெபத்தில் **பெயர் அழைப்பது - பாஷை பேசுவது** சரியென்று நான் கருதுவதாக வாசகர்கள் நினைத்துவிடகூடாது என்பதற்காக இந்த **முடிவுரையை** குறிப்பை எழுதினேன்.

இதற்காக அனைத்து சபைகளும், இந்து முன்னணியினருக்கு எதிராக, வழக்குக்கு எதிராக, அரசாங்கத்துக்கு எதிராக **போராட்டம் நடத்துவது** என்பது எனக்கு ஒப்புதல் இல்லை. உடன்பாடுமில்லை.

☐ வட இந்தியாவில் இரண்டு இடங்களில் **மிஷனரிகளை** ஜெயிலில் அடைத்திருந்தார்கள். பலருடைய ஜெபத்தால் இப்போது அவர்களுக்கு ஜாமீன் கிடைத்திருக்கிறது. இதற்காக **மிஷனரி ஸ்தாபனங்கள்** இணைந்து போராடவில்லை. **ஆனால் ஜெபித்தார்கள்.** ஆங்காங்கு ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு ஊரிலும்உள்ள **விசுவாசிகள் ஜெப குழு தலைவர்கள்** கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்து **அழுதார்கள்.** உபவாசித்து **ஜெபித்தார்கள்.** இதுதான் நமது ஆயுதம்.

" **பெலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தாலும் அல்ல என் ஆவியினால் அது ஆகும்**". சகரி. 4:6

**சத்தியம் TV**யில் ஒவ்வொரு நிகழ்ச்சியின் முடிவில் கூறுவார்களே **சத்தியத்தை சத்தியமாக கூறும் சத்தியம்** TV என்பார்கள். அதுபோல ஜாமக்காரன் **உண்மையை - உண்மை** என்றும் **பொய்யை** - பொய் என்றும் என் வாசகர்களுக்கு அறிவிக்கும் நோக்கத்திலதான் இதை எழுதினேன்.

## பேச்சு சுதந்திரம்

பேச்சு சுதந்திரம் நிராகரிக்கப்பட்டால் நாம் அனைவரும் ஊமையராகவும் பேசா மடைந்தைகளாகவும் .அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போல நடத்தப்படுவோம்.


*- ஜார்ஜ் வாஷிங்டன்*

ஒரு தேசத்தின் சுதந்திரத்தை தூக்கி எறிவோர் எவரும் பேச்சு சுதந்திரத்தை ஒடுக்குவதன் மூலமே ஆரம்பிக்கின்றனர்.

*- பென்ஜமின் பிராங்க்லின்*

(SELECTED )

# இதை நம்புகிறீர்களா?




**"இயேசு அழைக்கிறார்".** TV நிகழ்ச்சியில் சில மாதங்களுக்கு முன் சகோ. **D.G.S. தினகரன்** அவர்களின் **பழைய பிரசங்கங்களை** வரிசையாக ஒளிபரப்பினார்கள். அதில் ஒரு பிரசங்கத்தை நான் காண நேர்ந்தது.

பிரசங்கத்தில் சகோ. D.G.S. தினகரன் அவர்கள் கூறியதாவது. ஒரு நாள் சோர்வுற்றிருந்தேன். அப்போது தேவன் என்னை **பரலோகத்துக்கு** அழைத்து சென்றார். அங்கு இறங்கிய உடன் நான் மிகவும் பரவசத்துக்குள்ளானேன். **பரலோகம்** மிகப் பிரகாசமாக இருந்தது. அதே சமயம் சொல்ல முடியாத சந்தோஷத்துக்குள்ளானேன். அதை என்னால் வார்த்தையால் விவரிக்க முடியவில்லை. இங்கேயே இருந்துவிட்டால் எப்படியிருக்கும் என்று எண்ணி பூரித்துப் போனேன். என் சோர்வெல்லாம் நீங்கிப்போனது.

அப்போது ஆண்டவர் **பேதுருவை** அழைத்தார். **பேதுரு** வந்து நின்றார். அவரிடம் என்னை காண்பித்து இவரை **பரலோகமெல்லாம்** சுற்றி காண்பி என்று கூறி பேதுருவிடம் என்னை ஒப்படைத்து கர்த்தர் போய்விட்டார். பேதுரு பரலோகம் முழுவதையும் சுற்றி காண்பித்து அதன்பின் என்னை என் வீட்டில் கொண்டுவந்து விட்டுவிட்டு போய்விட்டார். எத்தனை பரவசம்.. எத்தனை மகத்தான அனுபவம். இதை கேட்கும் நீங்கள் எல்லாருமே இந்த அனுபவத்தை பெறலாம். நம் தேவன் சோர்வில் நம்மை பெலப்படுத்துகிறவர். சோர்வை எல்லாம் நீக்குகிறவர். நீங்களும் பலவிதமான வேதனையினால் இங்கு வந்திருக்கலாம். உங்கள் வேதனைகளையெல்லாம் நம் கர்த்தர் மாற்றுவார். நீங்கள் ஜெபத்தில் மனம் விட்டு ஆண்டவரிடம் பேசுங்கள் நான் அனுபவித்த அந்த **பரலோக அனுபவம்** உங்களுக்கும் கிடைக்கும் இப்படியாக சகோ. **D.G.S. தினகரன்** பேசினார்.

இதைத்தான் இன்று நாலுமாவடி சகோ. **மோகன் C. லாசரஸ்** தன் பிரசங்கத்தில் கூறுகிறார். ஒய்யான்குடி சகோ. ஜட்சன் ஆபிரகாம் கூறுகிறார். **ஆசீர்வாதம்** TV ஆலன்பால் கூறுகிறார். ஏஞ்ஜல் TV **சாது செல்வராஜ்** ஆகியோர்களும் கூறுகிறாரகள். தமிழ்நாட்டில் உள்ள இன்னும் பல ஊழியர்கள் இப்படிப்பட்ட **பொய்யான** கற்பனை அனுபவங்களை உண்மை என்று கூறி லட்சக்கணக்கான மக்களை ஏமாற்றுகிறார்கள்.

**வேதம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.**

யோவான் 3:13 **பரலோகத்திலிருந்து இறங்கினவரும், பரலோகத்திலிருக்கிவருமான மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை.**

**வாசகர்களே இங்குதான் நீங்கள் ஊழியர்களை எடைபோடவேண்டும்.**

இயேசுகிறிஸ்து **பொய் சொல்பவரா?** சொல்லமாட்டார். ! அப்படியானால் **சகோ. தினகரன் மோகன் சி. லாசரஸ். ஜட்சன் ஆபிரகாம்,** கார் **ஸ்டீபன்** இன்னும் ஏராளமான ஊழியர்கள் **ஜெபத்தில் பெயர் அழைப்பார்கள், வியாதியின் பெயரை** சொல்வார்கள். இவர்கள் யாவரும் நூற்றுக்கு நூறு **பொய்தான்** பேசுகிறார்கள் என்பதை **தைரியமாக** கூறலாமா? வேண்டாமா?

இன்று நிறைய ஊழியர்கள் இப்படிப்பட்ட **பொய்யை** துணிந்து கூற காரணமாக இருந்தவரே மறைந்த சகோ. D.G.S. **தினகரன்** அவர்கள்தான் என்பது விளங்குகிறது அல்லவா?

தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கானவர்கள் **இரட்சிப்படவும்,** ஊழியர்களாகவும் வரவும் யார் காரணமாக இருந்தாரோ **அவரே** அவரால் தொடப்பட்ட பல ஊழியர்கள் பொய் சொல்ல காரணமானார் என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா? இந்த ஊழியர்கள் யாவரும் சகோ. தினகரன் ஊழியத்தை கார்பன் காப்பிபோல அப்படியே சகோ. தினகரன் சொன்ன பொய் அனுபவங்களை அப்படியே பின்பற்றி ஊழியத்தை வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதில் மகன் பால் தினகரன் குடும்பமும் இணைந்துள்ளது.

சகோ. பெனிஹின் அவர்களே, சகோ. **தினகரனிடம்** அமெரிக்காவில் பேசும்போது உண்மையில் நீங்கள் **பரலோகம்** போனீர்களா? **மோசேயை** பாரத்தீர்களா? **பேதுருவை** நேரில் கண்டீர்களா? ஆச்சரியமான அனுபவமாக இருக்கிறதே? என் அனுபவத்தில் எனக்கு தெரிந்து இப்படிப்பட்ட அனுபவம் கேள்விப்படவேயில்லை என்றார் !. அதன் அர்த்தம் சகோ. பெனிஹினும் அதை நம்பவில்லை - ஏற்றுக்கொள்ளவில்லை என்பதாகும்.

சகோ. D.G.S. **தினகரன்** கூறியதைகேட்ட பென்ஹின் அவர்கள் தன் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினாரே, தவிற அதை அவர் **ஒப்புக்கொள்ளவில்லை.** அதை உண்மை என்று **அங்கீகரிக்கவும்** இல்லை. பெனிஹின் அவர்கள் ஊதி அல்லது கை நீட்டும்போது ஜனங்களை கீழே விழதள்ளுவது என்பதே பரிசுத்தாவியானவரின் கிரியை அல்ல என்பது வேறு விஷயம். ஏற்கனவே அதைக்குறித்து அவர் பேட்டியை அப்படியே எழுதினேன்.

இதை குறித்து உண்மை விசுவாசிகள் பலர் என்னிடம் கேட்கும்போது அதைக்குறித்து நான் வேத புஸ்தகத்தை வைத்து விளக்கினேன். அவர்கள் **ஒத்துக்கொண்டார்கள்.** ஆனால் சகோ. **தினகரன்** அவர்களை, சகோ. **மோகன் C.லாசரஸ்** அவர்களை அவர்களின் ஊழியங்களை அவர்கள் **நம்புகிறார்கள்.** அவர்களிடம் **ஜெபத்துக்காக** அவர்களை நாடி போனார்கள். மட்டுமல்ல என்னோடு பேசி அவர்களோடு நான் காரில் செல்லும்போது சகோ. **தினகரனின்** பாட்டைபோட்டு கேட்டுக் முடித்தபின் **வண்டியை ஸ்டார்ட் செய்கிறார்.** அவர் மனைவி சொல்கிறார். காலையில் அவர் கணவர் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போது சகோ. **தினகரனின்** பாடலை கேட்டவாரே எழுந்திருக்க வேண்டுமாம். அதற்காக அவர் மனைவி அதிகாலையிலேயே எழுந்து சகோ. **தினகரனின் பாட்டு கேஸட்டை** டேப் ரிக்கார்டரில் போட்டு

பாட செய்வார். கணவர் தூங்கி கண் விழிக்கும்போது அந்த பாடல் காதில் கேட்கவில்லை என்றால் கணவருக்கு பயங்கர கோபம் வந்துவிடும். அவர் பாடலை கண் விழித்தபோது **காதில் கேட்காததால்** அன்று என் **வியாபாரம்,** என் **பேக்டரி** எல்லாம் **ஆசீர்வாதம் இழக்கும்** என்பது அவரின் எண்ணம். இவர்போல இப்போதும் பலர் சகோ.தினகரனையும், அவர் பாடலையும் விக்கிரகமாக்கி அடிமையாகிப்போனார்கள்.

இந்து மதத்தில் உள்ளவர்கள் தங்கள் **கடைகள்** அல்லது ஓட்டல்களை காலை 6 மணிக்கு திறக்கும்போது **விநாயகனே!** என்று சீர்காழி கோவிந்தராஜன் பாடும் பாடலை பாடவிட்டு படத்துக்கு சாம்பிராணி போட்டபின்தான் **கடை கதவை** திறப்பார்கள். அவர்களுக்கும் இந்த கிறிஸ்தவர்களுக்கும் என்ன வித்தியாசம்.?

உதாரணமாக கடையில் உங்கள் வேலைக்காரன் **பண** விஷயத்தில் **பொய் பேசி** உங்களை ஏமாற்றிவிட்டான் என்றால் மறுபடியும் அவனை நம்புவீர்களா? அவனை துரத்தமாட்டீர்கள். ஆனால் அந்த சம்பவத்திற்குபின் பண சம்பந்தமான பொறுப்பை அவனிடம் கொடுக்கமாட்டீர்கள். அப்படியிருக்க நீங்கள் நேசிக்கும் **கிறிஸ்தவ ஊழியர்கள்** விஷயத்தில் மட்டும் எப்படி அவர்கள் **பொய் பேசுகிறார்கள்** என்று தெரிந்தும், அதுவும் அவர்கள் அந்த பொய்யிலேயே நிலைத்து நிற்கிறார்கள். அந்த **பொய் ஊழியத்தை** தொடர்ந்து செய்கிறார்கள் என்று **அறிந்தும்** அவர்களை நாங்கள் **தொடர்ந்து நம்புவதற்கு** எப்படி மனம் வருகிறது? யோசித்து பாருங்கள். உங்களுக்கே ஆச்சரியமாக இல்லை **!** அவர் பாடல் உங்கள் வியாபாரத்தை பெருக பண்ணுமா? அவர் பாடல் உங்களை சுகப்படுத்துமா? ஆனால் பாட்டின் வரிகள் உங்களை ஆறுதல்படுத்தும் என்பது உண்மை.

**என் பெயரால் தீர்க்கதரிசிகள்** பொய்யை உரைக்கிறார்கள். கடவுளாகிய நான் அவர்களை **அனுப்பவுமில்லை.** அவர்களுக்கு **கட்டளையிடவுமில்லை.** அவர்களோடு பேசவுமில்லை . அவர்கள் **உங்களுக்கு உரைத்த தீர்க்க தரிசனம் பொய்யான கற்பனைகள்.** அது பயனற்ற **குறிகூறல்.** அது அவர்களின் **வஞ்ஜக எண்ணங்கள்.** மேலும் அவர்கள் கூறியது அவர்களின் **சொந்த கற்பனைகள்** (கத்தோலிக்க மொழிபெயர்ப்பு) எரேமி 14:14

(K.J.V. மொழி பெயர்ப்பு) **அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: தீர்க்கதரிசிகள் என் நாமத்தை கொண்டு பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்கிறார்கள்.**

**நான் அவர்களை அனுப்பினதுமில்லை. அவர்களுக்கு கற்பித்ததுமில்லை. அவர்களோடே பேசினதுமில்லை. அவர்கள் பொய் தரிசனத்தையும் கள்ள சகுணத்தையும் இல்லாத விசேஷத்தையும் தங்கள் இருதயத்தின் கபடத்தையுமே உங்களுக்கு தீர்க்தரிசனமாக சொல்கிறார்கள். எரே. 14:14** என்று கர்த்தர் உரைத்தார்.

## இப்போது இயேசு கிறிஸ்து சொல்வதை கவனியுங்கள்:

இந்த கடைசி நாட்களில் (நியாத்தீர்ப்பின் நாள்) சகோ. D.G.S தினகர் போன்ற, சகோ. மோகன் C. லாசரஸ் போன்ற பலர் என்னை நோக்கி கர்த்தாவே ! கர்த்தாவே ! உமது (இயேசு என்ற) நாமத்தினாலே **தீர்க்கதரிசனம்** உரைத்தோமல்லவா? உம்முடைய (இயேசு என்ற) நாமத்தினாலே **பிசாசுகளை** துரத்தினோம் அல்லவா? உம்முடைய (இயேசு) என்னும் நாமத்திலே **அற்புதங்களை** செய்தோமல்லவா? என்பார்கள். அப்போது நான் (இயேசு) உங்களை ஒருகாலும்

அறியவில்லை, **அக்கிரம செய்கைகாரர்களே என்னை விட்டு அகன்று போங்கள்** என்று அவர்களுக்கு சொல்வேன் என்றார். (மத். 7:22,23)

நான் இதை குறிப்பிட்ட ஊழியர்கள்மேல் உள்ள **பொறாமையால்** எழுதவில்லை, நான் குறிப்பிட்ட இந்த ஊழியர்கள் யாரும் எனக்கு **பகைவர்கள்** அல்ல. இவர்களால் **என் ஊழியம்** எந்த விதத்திலும் **பாதிக்கப்படவில்லை.** பின் ஏன் இதை திரும்ப திரும்ப **ஜாமக்காரனில்** எழுதுகிறேன். காரணம் இவர்கள் **மறுபடியும்** மறுபடியும் TV காணும் **புதிய மக்களை** பழைய **வீடியோவை** போட்டு **பரலோக பொய்யை** திரும்ப திரும்ப காட்டும்போது **என் புதிய வாசகர்கள்** ஆயிரம்ஆயிரமாக பெருகிபோனார்கள். அவர்களும் இவர்களின் பொய்யைக் குறித்து அறிய வேண்டுமே, சத்தியத்தைக் குறித்தும் அறியவேண்டும். இவர்கள் **பேசுவது**! பேசியது! **பொய்** என்று அறியட்டும் என்பதற்காக எழுதினேன்.

## முழு குடும்பமும் அதே பொய்யை தொடர்கிறார்கள்.

தம்பி **பால் தினகரன், அவர் மனைவி, மகன், மகள்கள்** யாவரும் அதே வழியை அதே பொய்யை தான் தொடருகிறார்கள்.

முன்பெல்லாம் இவர்கள் அப்பாவைபோல **ஜெபத்தில் பெயர்களை அழைக்கும் பொய்யை** மட்டும் உரைத்தார்கள். இப்போது **சகோ.ஜட்சன் ஆபிரகாம்**போல. **பெனிஹின்போல** ஜெபிக்கும் போது **ஆட்களை கீழே விழ வைக்கிறார்கள்.** DGS அவர்களின் **மருமகளும்** அதே பொய் ஊழியத்தை தொடர ஆரம்பித்துவிட்டார்.

இதற்குமுன் **இவர்கள் கைவைக்கும்போது கீழே விழாதவர்கள்** இப்போது **எப்படி கீழே விழுகிறார்கள்**? இவர்களை பயன்படுத்தும்ஆவி இதற்குமுன் யாரையும் கீழே விழவைக்கவில்லையே? அன்று அந்த ஆவி எங்கே போனது.? இப்போது மாத்திரம் அந்த ஆவி எங்கிருந்து வந்தது? கேள்வி எழும் அல்லவா?.

இந்த ஊழியர்களின் விசிறிகள், **அனுதாபிகள்,** இவர்களுக்கு **பண உதவி** செய்பவர்கள் அத்தனை பேர்களும் இனிமேல் கூடுதலாக என்னை **வெறுப்பார்கள்,** பகைப்பார்கள். இதுவரை என்னை வெறுக்காதவர்கள்கூட இந்த கட்டுரையை வாசித்தபின் **என்னையும்** என் **ஊழியத்தையும்** கூடுதலாக **வெறுப்பார்கள் என்பதை நான் அறிந்ததே!.**

- **தெளிவடைபவர்கள் தெளிவடையட்டும்... வெருப்பவர்கள் இன்னும் வெருக்கட்டும்**

- **அறிவிப்பதும், எச்சரிப்பதும் ஜாமக்காரனின் வேலை. அதை நிறைவேற்றிவிட்டேன். தொடர்ந்தும் நிறைவேற்றுவேன்.**

இவர்கள் யாவரும் இந்த பிழையான **பொய்யான** வெளிப்படுகளை கூறுவது, தாங்கள் **பரலோகத்துக்கும், தெய்வத்துக்கும்** மிகவும் **நெருக்கமானவர்கள்** மக்களுக்கு என்பதை காட்டவே இப்படிப்பட்ட ஊழியத்தை செய்கிறார்கள். இது ஒரு **ஊழிய வியாபாரம் ஆகும். இதில் ஏமாந்தவர்கள் ஏராளம். ஏமார்ந்துகொண்டேயிருப்பவர்களும் ஏராளம்...** ஜெபிப்போம்.



# வாழ்த்துகிறோம்.



## BYM-ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் புதிய நிர்வாகக்குழு:

**BYM (Blessing Youth Mission) என்ற மிஷனரி ஸ்தாபனத்தில் புதிய மாற்றங்கள்:**

BYM மிஷனரி ஊழியத்தின் ஸ்தாபகரான சகோ.**R.ஸ்டான்லியுடன்,** பொறியாளர் பட்டப்படிப்பு படித்த இளைஞர்கள் இணைந்து ஜெபித்து ஆரம்பித்த மிஷனரி இயக்கம்தான் BYM என்ற மிஷனரி ஸ்தாபனமாகும். ஆரம்பத்தில் வாலிபர் மத்தியில் எழுப்புதல் என்ற திட்டத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் **ஆசீர்வாத வாலிபர் இயக்கம்**(Blessing Youth Mission) என்பது மிஷனரி பாரம் உண்டானவுடன் அதை **ஆசீர்வாத வாலிப மிஷனரி இயக்கமாக சகோ.ஸ்டான்லி** அவர்கள் மாற்றினார். FMPBபோல் மிக சிறப்பாக இயங்கும் மிஷனரி ஸ்தாபனங்களில் ஒன்றுதான் BYM மிஷனரி ஸ்தாபனம். **பண** விஷயத்திலும்,**நிர்வாக** விஷயத்திலும் மிஷனரிகளின் தேவைகள், மிஷனரி பிள்ளைகளின் **படிப்பு** விஷயங்களில் மிக அற்புதமாக திட்டமிட்டு செயல்படுத்தப்பட்ட மிஷனரி ஸ்தாபனம்தான் BYM ஸ்தாபனம். சகோ.R.**ஸ்டான்லி**, பொருளாளர் சகோ.**ஜெயராஜ்** இவர்களின் காலத்தின் வெகு வேகமாக வளர்ந்த இந்த ஸ்தாபனம் சகோ.ஸ்டான்லியின் மனைவியும், CMC ஆஸ்பத்திரி டாக்டருமான **Dr..லில்லியன்ஸ்டான்லி,MBBS,DCH.**, அவர்கள் தன் கணவருடன் ஊழியத்தில் இறங்கியப்பின் வாலிப பெண்களிடையே பெரும் எழுச்சி உண்டானது. ஊழியம் மிக வேகமாக வளர்ச்சியுற்றது.

சகோ.ஸ்டான்லி அவர்கள் **வேதாகம கல்லூரி** சென்று படிக்காமல்போனாலும் அவர் ஒரு புத்தகபுழு. ஏராளமான ஆவிக்குரிய புத்தகங்கள் படித்தறிந்து வேதத்தைதானே தியானித்து வேத வசனங்களை வியாக்கியானிப்பதில் சிறப்பு பெற்றவரானர். அவர் ஊழியத்தில் பிரவேசித்த குறுகிய காலத்தில் அவர் **வேதம் கற்பிக்கும முறை** மிக சிறப்பு பெற்றது. அவர் எழுதிய புத்தகங்கள் அவர் மனைவி **Dr.லில்லியன்** எழுதிய புத்தகங்கள் யாவும் பெயர் கிறிஸ்தவர்கள் இடையே பெரும் எழுச்சியை உண்டாக்கியது. கர்த்தர் இப்படிப்பட்டவர்களை காலாகாலத்தில் எழுப்பி ஊழியத்தில் தன் சித்தத்தை நிறைவேற்றுகிறார்.

அவர் ஓய்வுபெற்றபின் இந்த BYM மிஷனரி ஸ்தாபனத்தை நடத்தி செல்பவர் யார் என்ற கேள்வி எழுந்தபோது **குழப்பமும்-அமைதியும்தான்** பதிலாக அமைந்தது.

தலைவர்களை தெரிந்தெடுப்பதில் **டாக்டர்.புஷ்பராஜ்** ஆகிய நானும் தலையிட்டு உதவ சிறு துரும்பானேன். அப்போதுதான் தமிழ்நாட்டு அரசு உயர் பதவியிலிருந்து மின்சார துறையில் ஓய்வுபெற்ற தலைமை பொறியாளரும்,டைராக்டருமான **சகோ.லைனல்** அவர்கள் BYM ஸ்பானத்தை பொறுப்பேற்றார். சகோ.ஸ்டான்லி இல்லை என்றால் BYM மிஷனரி ஸ்தாபனம் ஒன்றுமில்லாமல்போகும் என்று பலர் நினைத்த நிலையில் சகோ.லைனல் அவர்கள் மூலமாக BYM மிஷனிரி ஊழியத்தை துாக்கி நிறுத்த கர்த்தர் அவரை பயன்படுத்தினார்.

சகோ.லைனலுக்கு முன்னும், அவருக்கு பின்னும் சில பிரச்சனைகள் எழும்பின. அது எல்லா பெரிய ஸ்தாபனங்களிலும் நடைபெறுவதுதான். **சீஷர்கள் பெருகினபோது அவர்களுக்குள் வாக்குவாதம் உண்டானது** என்ற வேத வசனத்தின்படி BYM ஸ்தாபனமும் அப்படிப்பட்ட பிரச்சனைகளை சந்தித்தது. கர்த்தருடைய கிருபையால் BYM ஸ்தாபனம் அதிலிருந்து வெளிவந்து மறுபடியும் உயிர்மீட்சிபெற்றது.

இப்போது முகம் தெரியாத BYMமில் மற்ற தலைவர்களைப்போல மக்களிடையே பிரபலமாகாத சகோதரர்கள் BYM நிர்வாகிகளாக, நிர்வாக குழுவில் இடம் பெற்றார்கள்.

**தலைவர்:** திரு.**காட்வின் சாமுவேல், துணைத்தலைவர் :** திரு.**கமலக்குமார்**

**பொது** காரியதரிசி : திரு.**நீதிதாசன், பொருளாளர் :** திரு.**அலெக்சாண்டர்**

ஆகியவர்கள் BYM நிர்வாகிகளாக தெரிந்தெடுக்கப்பட்டனர்.

BYMமின் புதிய நிர்வாகிகளை ஜாமக்காரன் சார்பிலும் வாழ்த்துகிறோம். தொடர்ந்து இப்படிப்பட்ட உண்மையான மிஷனரி ஸ்தாபனங்களுக்காக வாசகர்கள் தொடர்ந்து ஜெபிப்போம்.

## இயேசுவின் தியாகமும்- கலைஞர்.கருணாநிதியின் தியாகம் ஒன்று:



ECI சபைகளின் ஸ்தாபகர் **பிஷப். எஸ்றாசற்குணம்** அவர்களின் ஒப்பீடு இது. உலகத்தில் யாரோடும் ஒப்பிடமுடியாதவர் **இயேசுகிறிஸ்து.** ECI Church DMK கழக கிளை செயல் அலுவலகமாக இயங்குவதாக பேசப்படுகிறது.

கிறிஸ்தவர்கள், ஊழியர்கள் நாட்டு அரசியலை கண்டிப்பாக அறிந்திருக்கவேண்டும். ஆனால் அரசியலில் ஈடுபடக்கூடாது. அரசியல் ஒரு சாக்கடை என்பதை பிஷப் எஸ்றா சற்குணமும் அறிவார். ஒரு காலகட்டத்தில் கலைஞர் அவர்கள் பிஷப்.எஸ்றா சற்குணம் அவர்களை ஒதுக்கி வைத்த அனுபவமும் உண்டு.

**பிஷப்.எஸ்றாசற்குணம்** அவர்கள் கலைஞர்.கருணாநிதியின் நிகழ்ச்சியில் நான் வணங்கும் **இயேசுகிறிஸ்துவின் தியாகமும்- கலைஞர்.கருணாநிதி** அவர்கள் **கட்சிக்காக செய்த தியாகமும் ஒன்றாக காண்கிறேன்** என்றார். இது கிறிஸ்தவர்களிடையே பெரும் கொந்தளிப்பை உண்டாக்கியது. இயேசுகிறிஸ்து எங்கே? மூன்று மனைவிகளுடைய **கலைஞர் கருணாநிதி** எங்கே? ஒரு பெரும் ECI சபைகளின் ஸ்தாபனத்தின் தலைவருக்கு **இயேசுவோடு-கலைஞரை** ஒப்பிட எப்படி மனம் வந்தது. இதிலேயே அவரின் ஆவிக்குரிய நிலைபாட்டை அறியலாம். இப்படிப்பட்ட ஒப்பிடுதல் உள்ளத்தில் நிலைத்திருந்ததால் **தன் மகளை** வசனத்தின்படி வளர்க்கமுடியவில்லை. எப்படியோ ECI சபை தன் தலைவனை பின்பற்றாமல் சபையை வசனத்தின்படி நடத்தினால் சரி.

# துாத்துக்குடி- நாசரேத் CSI டையோசிஸ்

# கோவில்பட்டி CSI கன்வென்ஷன்




கர்த்தருடைய கிருபையால் 9வது முறையாக **கோவில்பட்டி நகர்** கன்வென்ஷனில் கர்த்தரின் வசனத்தை பகிர்ந்துக்கொடுக்க **Rev.ஏசுஅடியான்** அவர்களால் அழைக்கப்பட்டேன்.

பொதுவாக கோவீல்பட்டி கிறிஸ்தவ மக்களுக்கு வசனத்தை கேட்கும் ஆவல் அதிகம் உண்டு. அதனால்தான் பிரசித்திபெற்ற **கெஸ்விக் கன்வென்ஷன்** என்ற பெயரில் வருடாவருடம் அனைத்து சபைகளும் சேர்ந்து கூட்டங்கள் ஏற்பாடு செய்து நானும் அழைக்கப்பட்டேன். இப்போது நடந்த CSI சபை கன்வென்ஷன் மிகுந்த ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.



# IEM மிஷனரி கன்வென்ஷன

## (தூத்துக்குடி St. Peter's CSI Church)







**Dr.Rev.தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள் ஆரம்பித்த IEM மிஷனரி ஸ்தாபனம்மூலம் இந்தியா எங்கும் ஏராளமான மிஷனரிகளை அனுப்பியும், வட இந்திய ஆதிவாசிகள் உள்ள இடங்களில் ஆஸ்பத்திரிகள் அமைத்து இலவச வைத்தியங்கள்மூலம் அவர்களுக்கு இயேசுவை அறிவிக்கும் பணியும், ஏராளமான ஆதிவாசிகள் மொழிகளில் எழுத்துக்களை உருவாக்கி அம்மக்கள் பேசும் பாஷையிலேயே வேத புஸ்தகத்தை மொழி பெயர்த்து கொடுக்கும் சிறப்பான பணி IEM மூலம் நடைபெறுகிறது.

தமிழ்நாட்டின் மாநில கன்வென்ஷன் 2018 ஆகஸ்ட் மாதம் 10,11, 12 தேதிகளில் தூத்துக்குடி CSI டையோசிஸ், தூத்துக்குடி St. Peter's CSI Church வளாகத்தில் வைத்து சிறப்பாக நடந்தேறியது.


தூத்துக்குடி டையோசிஸ் பிஷப் **Rt. Rev.தேவசகாயம்** அவர்கள் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். IEM பொதுச்செயலர் Rev. Dr. **ராஜாசிங் எலியாஸ்**, IEM வேதாகம மொழிபெயர்ப்பு பொறுப்பு **Rev. வில்பிரட் கிரிவாசன்** (நாக்பூர்), சிறப்பு செய்தியாளராக **Dr. புஷ்பராஜ்** ஆகிய நானும் செய்தியளித்தேன். வேத ஆராய்ச்சி பணித்தள மிஷனரிகளின் அறிமுகம் கலாச்சார நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாக நடந்தன.

# கர்த்தருக்குள் மரித்தவர்களின் மரண அறிவிப்பு



Rev. V. காந்திசெல்வன் (திருநெல்வேலி CSI டையோசிஸ்) அவர்கள் தனது 84ம் வயதில் 2018 ஆகஸ்ட் மாதம் சகல ஆயத்தத்துடனும் தன் ஆவியை கர்த்தரிடம் ஒப்படைத்தார். குறிப்பிட்ட 2018 வருடத்தோடு தன் வாழ்க்கையின் ஓட்டம் முடிந்தது என்பதை உணர்ந்து தன் குடும்பத்தாருக்கும் ஞாயிறு காலை ஆராதனையில் சபையினரிடமும் கூறியிருக்கிறார். ஆகவே சரியான தெளிவோடு எதிர்பார்த்தலோடு ஐயா அவர்கள் மரித்து இருக்கிறார்.

திருநெல்வேலி திருமண்டலத்திலேயே நான் விரும்பும் ஆயர்களில் Rev. Gandhi Selvyn அவர்களும் ஒருவர். இவர் தன் குடும்பமாக என்னை நேசிப்பவராகும். ஆகவேதான் பெற்ற பிள்ளைகளில் ஒருவருக்கு புஷ்பராஜ் என்ற பெயரை வைத்தார்கள். மரிக்கும்போது தன் ஆவியை கர்த்தரிடம் ஒப்படைத்தார். மனைவி,பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.



## Rev. J. DANIEL

(Methodist Church, Singapore)

**சிங்கப்பூர் மெத்தடிஸ்ட் சபை பாஸ்டராகவும், பிஷப்பாகவும்** பணியாற்றிய Rev. J.Daniel அவர்கள் தன்னுடைய 93வது வயதில் 2017 July 2ம் தேதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

ஐயா அவர்களை 1970ம் வருடம் முதல் நல்ல பழக்கம். சிங்கப்பூரில் அவர் எந்தெந்த சபையில் ஊழியம் செய்தாரோ அங்கெல்லாம் என்னை அழைத்து கன்வென்ஷன் நடத்த மிகவும் ஆசைப்படுவார். அநேக போட்டிகளுக்கிடையில் கர்த்தர் அவரை **மெத்தடிஸ்ட் சபைகளுக்கு பிஷப்பாக** தெரிந்தெடுக்க ஏற்பாடு செய்தார். தன் ஊழியத்தில் மிகவும் உண்மையாக இருந்தார்.

எனக்கு சிங்கப்பூரில் ஊழியங்களுக்கு எதிர்ப்பு ஏற்பட்ட காலங்களில் துணிந்து என் கூட்டங்களை சிங்கப்பூரில் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தினார். அந்த நாட்களை நான் நன்றியுடன் நினைவுகூறுகிறேன்.

ஊழியத்தில் அவர் ஓய்வு பெற்றபின் **இயேசு அழைக்கிறார்** ஊழியத்தில் சிங்கப்பூர் பகுதிக்கு பொறுப்பெடுத்து ஊழியம் நிறைவேற்றினார். ஐயா அவர்களின் துணைவியார் பெண்கள் ஊழியத்தில் தன் பங்கை நன்கு நிறைவேற்றினார். ஒரு மகன் உண்டு. ஐயா விட்டுபோன மனைவி மகன் அவர்களுக்காக நாம் ஜெபிப்போம்.

# இலங்கை கண்வென்ஷன்

## HUTTEN & DICKOYA (ஆங்கிலிக்கன் சர்ச் கன்வெண்ஷன்)











இலங்கை ஆங்கிலிக்கன் சபை கன்வெண்ஷன் கூட்டங்கள் HUTTEN & DICKOYA என்ற இடங்களில் மிக சிறப்பாக ஆசீர்வாதத்தோடு நடந்து முடிந்தது.

சபையின் தலைமை ஆயர் VICAR REV FR.LAKSHMAN DANIEL அவர்கள் வெகு சிறப்பாக ஏற்பாடுகளை செய்திருந்தார். யாழ்பானம், முல்லை தீவு, கண்டி ஆகிய இன்னும் அநேக இடங்களிலிருந்து மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

# வாழ்நாளை கணிக்கும் ஞானம்

❖ சங் 90:12. கர்த்தாவே, எங்கள் வாழ்நாளை கணிக்கும் ஞானத்தை எங்களுக்கு போதித்தருளும்.

❖ நாட்கள் பொல்லாதவைகள்: எபேசி 5:16 நாம் வாழும் இக்காலம் பொல்லாதவைகளானபடியால் நீங்கள் அறிவிலிகளாய் இராமல் ஆண்டவருடைய சித்தம் எது என்று அறிந்திருங்கள் (கத்தோலிக்க வேதம்).

❖ இரட்சிக்கப்பட்டவர்கள் படும் கஷ்டங்கள் வியாதிகள் கொஞ்ச காலம் மட்டும்தான்.

❖ காரணம் கர்த்தருடைய பிள்ளைகள் துன்பப்படவேண்டியது அவசியமானபடியால் அந்த துன்பப்படும் வாய்ப்பை நினைத்து களிகூறுங்கள். இப்படிப்பட்ட துன்பங்கள் உங்களுக்கு உண்டாவது கர்த்தர்மேல் வைக்கும் விசுவாசம் உண்மையானது என்று காட்டவே. ஆனாலும் அந்த கஷ்டங்கள் யாவும் கொஞ்ச காலம் மட்டும்தான்(கத்தோலிக்க வேதம்-விவரித்து எழுதப்பட்டது)1 பேது 1:6,7.

❖ இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்கள் துன்பங்கள் உங்களுக்கு புகழ்ச்சியும், கனமும் மகிமையுமுண்டாக்க காணப்படும்.

OCTOBER 2018

Printed Book (Periodical)

RNI Reg. No. TNBIL/2016/70171

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.